[1972 மார்ச் 25

(iv) பணி முடிக்கப்பட்ட பிறகும், பணி முடிக்கப்பட்டது குறித்து நிலையம் சான்றிதழ் காட்டிய பிறகும் இந்திய அரசின் பங்குத் தொகையான 1/3 பாகம் கொடுக்கப்பட்ட பின்னரும் மாநில அரசின் பங்குத் தொகை வழங்கப்படும்.

(v) எந்த நிறுவனங்கள் மருத்துவமனைகளை ஏற்படுத்தி வைக்கின்றனவோ அவை அம் மருத்துவமனைகள் தொடர்ந்து பேணி வரப்படுவதற்குப் பொறுப்பேற்க வேண்டும்; அந்நிறுவனங்கள் சட்ட ஏற்பு பெற்றவையாகவும் சிறந்த திறன் உடையனவாகவும் இருக்கவேண்டும்.

(vi) தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில், தனியார் துறையால் ஏற்கவியலாதவிடத்து மருத்துவ மனையை நடத்துவதற்காகும் செலவினத்தில் துண்டு விழுந்தால், அது இந்திய அரசு, மாநில அரசு மற்றும் தொண்டு நிறுவனம் ஆகியவற்றால் சமமாக பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

இந்த அரசால் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் குறித்து இந்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகின்றது.

இணைப்பு II.

(531-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

1972-73-ம் ஆண்டு வேளாண்மைக் கோரிக்கைகள் பற்றிய குறிப்பு

தோற்றுவாய்.

1972-73-ம் ஆண்டுக்கான கோரிக்கை எண் "16. வேளாண்மை" யின் கீழ் ரூ. 21,03,85,400-க்கு மேற்படாத ஒரு தொகையையும், கோரிக்கை எண் "39, வேளாண்மை மீதான மூலதனச் செலவுகளி"ன் கீழ் ரூ. 18,46,300-க்கு மேற்படாத ஒரு தொகையையும் அரசுக்கு வழங்குமாறு வேண்டிக் கொள்கிறேன்.

1971-72-ம் ஆண்டில் பல்வேறு வேளாண்மைத் திட்டங்களை நிறைவேற்றியதில் அடைந்த முன்னேற்றம் குறித்த ஆய்வுரையையும், 1972-73-ம் ஆண்டிற்கான செயல் திட்டத்தையும் இப் பேரவை முன்னர் வைக்கிறேன். கடந்த ஆண்டில் "வேளாண்மை" மானியக் கோரிக்கைகளை முன்மொழிந்து பேசுகையில் எனக்கு முன்னர் இத்துறையின் பொறுப்பினை வகித்து வந்த மாண்புமிகு அமைச்சர், 1970-71-ல் இம்மாநிலத்தில் உணவுதானிய உற்பத்தியின் முன் ஒருபோதும் எய்திராத சாதனையை இம்மாமன்றத்தில் அறிவிக்கும் பேறு பெற்றார். 1970-71-ல் இந்திய நாட்டில், அரிசி உற்பத்தி செய்யும் எல்லா மாநிலங்களைக் காட்டிலும், அரிசி உற்பத்தியில் சராசரி ஏக்கர் விளைச்சலில் தமிழ்நாடு